▶ டெல்லி நிதி ஆயோக் தலைமை அலுவலகத்தில் ஒன்றிய பட்ஜெட் தொடர்பாக பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் மோடி நேற்று ஆலோசனை நடத்தினார். இதில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

2026-27ம் ஆண்டு பட்ஜெட் தாக்கல்

பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

புதுடெல்லி, டிச.31: வரும் 2026-27-ம் நிதியாண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வரும் பிப்ரவரி 1ம் தேதி தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நிதி ஆயோக் கூட்டம் நேற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில் இருக்கும் அதன் தலைமை அலுவலகத்தில் நடந்தது. இதில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நிதி ஆயோக்கின் முன்னணி பொருளாதார வல்லுநர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிதி ஆயோக் துணைத் தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி பி.வி.ஆர்.சுப்ரமணியம் மற்றும் நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தின் முக்கிய அம்சமாகவும் பிப்ரவரி 1ம் தேதி வரவிருக்கும் ஒன்றிய பட்ஜெட் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தற்போதைய பொருளாதார நிலை குறித்த நிபுணர்களின் மதிப்பீடுகளையும், வளர்ச்சி வாய்ப்புகள், நிதி மேலாண்மை மற்றும் நீண்டகால வளர்ச்சியைத் தக்கவைக்கத் தேவையான கட்டமைப்பு நடவடிக்கைகள், எதிர்கால முன்னுரிமைகள், வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும், வளர்ந்து வரும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை முன்கூட்டியே எதிர்கொள்வது குறித்தும் பொருளாதார நிபுணர்கள் தரப்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா விதித்துள்ள 50சதவீத வரியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை வரும் ஒன்றிய பட்ஜெட் எவ்வாறு சரி செய்யப் போகிறது என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதைத்தொடர்ந்து அனைத்து மாநில முதல்வர்களும் கலந்து கொள்ளும் விதமாக நிதி ஆயோக் கூட்டத்தின் தேதி விரைவில் அறிவிக்கப்பட்டு அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7 வருட காதலியை மணக்கிறார்

பிரியங்கா காந்தியின் மகனுக்கு நிச்சயதார்த்தம்

புதுடெல்லி, டிச. 31: முன்னாள் பிரதமர் ராஜீவ்-சோனியா தம்பதியின் மகளும், மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் சகோதரியான எம்பி பிரியங்கா காந்தி - ராபர்ட் வத்ரா தம்பதிக்கு 24 வயது ரைஹான் வத்ரா என்ற மகனும், மிரய்யா என்ற மகளும் உள்ளனர். ரைஹான் வத்ரா புகைப்படக் கலைஞராகவும் விஷுவல் ஆர்ட்டிஸ்டாகவும் பணியாற்றி வருகிறார். இவர் தனது தாத்தா ராஜீவ் காந்தி மற்றும் மாமா ராகுல் காந்தி பயின்ற டேராடூன் பள்ளியில் பள்ளிப் படிப்பையும், லண்டன் பல்கலைக்கழகத்தில் அரசியல் படிப்பையும் முடித்துள்ளார். இவரும் டெல்லியைச் சேர்ந்த புகைப்படக் கலைஞரான அவிவா பெய்க்கும் கடந்த 7 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். அவிவா பெய்க் ஜின்டால் பல்கலைக்கழகத்தில் இதழியல் படித்தவர் என்பதோடு, தேசிய அளவிலான கால்பந்து வீராங்கனையாகவும் திகழ்கிறார். இந்நிலையில், இரு வீட்டார் சம்மதத்துடன் ரைஹான் வத்ரா மற்றும் அவிவா பெய்க் ஆகியோருக்கு இடையே நிச்சயதார்த்தம் நடைபெற்று உள்ளது. அவீவா மூன்று நாட்களுக்கு முன்பு ரைஹானுடன் எடுத்த ஒரு புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரீஸில் பதிவேற்றியிருந்தார், அதை இப்போது மூன்று இதய ஈமோஜிகளுடன் 'ஹைலைட்ஸ்' பிரிவில் வைத்துள்ளார். விரைவில் திருமணம் நடைபெற உள்ளது.

யார் இந்த அவிவா?

ரைஹான் காதலி அவிவாவின் தந்தை இம்ரான் டெல்லியின் தொழில் அதிபர். தாயான நந்திதா பெய்க் பிரபல டிசைனராக உள்ளார். அவீவா பெய்க், ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகத்தில் இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல் பயின்றார் 'அட்லியர் 11' என்ற புகைப்பட ஸ்டுடியோவின் இணை நிறுவனர் ஆவார். மேலும் அவிவாவின் தாயான நந்திதா பெய்க்கும் பிரியங்கா காந்தியும் நீண்டகால நண்பர்கள். இரு குடும்பத்தினரும் திருமண விழாவை தனிப்பட்ட முறையில் ராஜஸ்தானின் ரத்தம்போரில் நடத்த உள்ளனர்.

சிறப்பு கூட்டத்தில் நிறைவேற்றம்

ஜி ராம் ஜி சட்டத்திற்கு எதிராக பஞ்சாப் பேரவையில் தீர்மானம்

ஜனநாயக விரோதமானது என சிவ்ராஜ் சிங் சவுகான் கண்டனம்

போபால், டிச. 31: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு மாற்றாக ஜி ராம் ஜி திட்டம் நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பை மீறி நிறைவேற்றி சட்டமாக்கப் பட்டுள்ளது. இதை எதிர்த்து பஞ்சாப் ஆம் ஆத்மி அரசு சட்டப்பேரவையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றியது.

இது குறித்து ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் கூறுகையில், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவது அரசியலமைப்புச் சட்டத்தின் உணர்வுக்கு எதிரானது. ஜனநாயகத்திற்கு விரோதமானது. மாநில சட்டங்களுக்கு எதிராக அனைத்து பஞ்சாயத்துகளில் தீர்மானம் நிறைவேற்றத் தொடங்கினால் சரியாக இருக்குமா? என்றார்.

182 கிமீ வேகத்தில்

வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் சோதனை

கோட்டா, டிச.31: வந்தே பாரத் ரயில்கள் நாடு முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதை தொடர்ந்து வந்தேபாரத் ஸ்லீப்பர் ரயில் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்தன. அந்த ரயிலை இயக்கி சோதிக்கும் பணி நேற்று நடந்தது. ராஜஸ்தான் மாநிலம் கோட்டா மற்றும் மத்தியபிரதேச மாநிலம் நாக்டா வழித்தடத்தில் நேற்று நடைபெற்ற சிஆர்எஸ் சோதனைகளின் போது, ஸ்லீப்பர் வந்தே பாரத் ரயில் மணிக்கு 182 கி.மீ வேகத்தை வெற்றிகரமாக எட்டியது. இதுதொடர்பான வீடியோவை ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ளார். இந்தச் சோதனைகளில் வெற்றி பெற்றால், பிஇஎம்எல்(BEML) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஸ்லீப்பர் வந்தே பாரத் ரயில் வணிக ரீதியான செயல்பாடுகளுக்கு ஒன்றிய அரசால் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில்

கேரள முன்னாள் அமைச்சரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை

திருவனந்தபுரம், டிச. 31: சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் 2 முன்னாள் தலைவர்கள், முன்னாள் தேவசம் போர்டு அதிகாரிகள், முன்னாள் உறுப்பினர் உள்பட 10 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கடந்த 2019ம் ஆண்டு உறுப்பினராக இருந்த விஜயகுமார் என்பவர் கடந்த இரு தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையே கடந்த பினராயி விஜயன் மந்திரிசபையில் தேவசம் போர்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்தவரும், தற்போதைய மார்க்சிஸ்ட் எம்எல்ஏவுமான கடகம்பள்ளி சுரேந்திரனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததால் அவரையும் கைது செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இந்நிலையில் கடகம்பள்ளி சுரேந்திரன் மற்றும் கடந்த இரு வருடங்களாக தேவசம் போர்டு தலைவராக இருந்த பிரசாந்த் ஆகியோரிடம் கடந்த இரு தினங்களுக்கு முன் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தியது. வழக்கமாக இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அனைவரிடமும் திருவனந்தபுரம் குற்றப்பிரிவு அலுவலகத்தில் வைத்துத் தான் போலீசார் விசாரணை நடத்தினர். ஆனால் இவர்கள் இருவரிடமும் சிறப்பு புலனாய்வுக் குழு எஸ்.பி. சசிதரன் தலைமையில் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு ரகசிய இடத்தில் வைத்து போலீசார் விசாரணை நடத்தினர். சுமார் 2 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

விசாரணை நடந்ததை கடகம்பள்ளி சுரேந்திரன் உறுதி செய்துள்ளார். தங்கம் திருட்டு நடந்த 2019ம் ஆண்டு தேவசம் போர்டு அமைச்சராக இருந்ததால் சிதனக்குத் தெரிந்த அனைத்து விவரங்களையும் போலீசிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

ராஜபாளையத்தில் விசாரணை

சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கம் திருட்டு தொடர்பாக விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அருகே ஜமீன்கொல்லங்கொண்டான் இந்திரா நகரைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரது வீட்டில் சிறப்பு புலனாய்வு குழு டிஎஸ்பி சுரேஷ்பாபு தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் சோதனையிட்டனர். அதன்பிறகு, சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் வைத்து கிருஷ்ணனிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து திருவனந்தபுரம் எஸ்ஐடி அலுவலகத்தில் ஆஜராகவும் அறிவுறுத்தி சென்றனர். அதன்படி கிருஷ்ணன், எஸ்ஐடி அலுவலகத்தில் ஆஜரானதாக தெரிகிறது.

எஸ்ஐஆர் விசாரணைக்கு பயந்து முதியவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

கொல்கத்தா, டிச.31: மேற்கு வங்க மாநிலத்தில் எஸ்ஐஆர் பணிகள் நடந்து வருகின்றன. இதில் புருலியா மாவட்டத்தை சேர்ந்த துர்ஜன் மாஜி(82) என்பவரது பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை. இதனால், பிடிஓ விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் நேற்று ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து துர்ஜன் மாஜியின் மகன் கனாய் மாஜி கூறுகையில், "என் தந்தையின் பெயர் 2002 வாக்காளர் பட்டியலில் இருந்தது. அவர் ஏன் விசாரணைக்கு அழைக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. நோட்டீஸ் அனுப்பியதால் அவர் தற்கொலை செய்துள்ளார் என்றார்.

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், இந்திய அரசு
கர்மசாரி ராஜ்ய பீமா நிகம
(श्रम एवं रोजगार मंत्रालय, भारत सरकार)
EMPLOYEES' STATE INSURANCE CORPORATION
(Ministry of Labour & Employment, Govt. of India)

மண்டல அலுவலகம்/क्षेत्रीय कार्यालय / Regional Office
143, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.
143, स्टर्लिंग रोड, नुंगमबाक्कम, चेन्नै - 600034.
143, Sterling Road, Nungambakkam, Chennai - 600034.
Phone: 044-28306300 (100 Lines)
E-mail: rd-tamilnadu@esic.gov.in
Website: www.esic.gov.in/www.rotamilnadu.esic.gov.in

ENGAGEMENT OF ENGINEERS ON CONTRACT BASIS

Applications are invited from retired Engineers for engagement on contract basis as Assistant Engineer (Civil) and Junior Engineer (Electrical)/(Civil) in ESIC, Tamil Nadu Region as detailed under:

Number of Engineers required:

1	Assistant Engineer (Civil)	1 Post for Regional Office, Chennai
2	Junior Engineer (Civil)	2 Post for Regional Office, Chennai 1 Post for ESIC MCH, KK Nagar, Chennai 1 Post for ESIC Hospital, Tirupur
3	Junior Engineer (Electrical)	1 Post for Regional Office, Chennai 2 Post for ESIC MCH, KK Nagar, Chennai 1 Post for ESIC Hospital, Tirupur

Tenure of contract is **one year or till the process of regular recruitment for these posts is completed, whichever is earlier.**

Walk-in Interview on **06.01.2026** - Timing **02.00 pm**

Venue: EMPLOYEES' STATE INSURANCE CORPORATION, Regional Office (Tamilnadu), Panchdeep Bhavan, 143, Sterling Road, Nungambakkam, Chennai-600 034.

For educational and other qualifications, age, application format and other details visit our website **www.esic.gov.in**

Regional Director(I/c)

தெற்கு இரயில்வே

சென்னை கோட்டம்

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் அவர்கள் அலுவலகம்
எலக்ட்ரிக் லோகோ ஷெட், அரக்கோணம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியானவர், இரயில்வேயின் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் https://www.ireps.gov.in வாயிலாக, பின்வரும் பணிக்காக ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

ஒப்பந்தப்புள்ளி எண்	M-RS-AJJ-29-OT-25-26-11, தேதி 29.12.2025.
பணி பற்றிய விவரம்	எலக்ட்ரிக் லோகோ ஷெட் /அரக்கோணம் : அரக்கோணம் எலக்ட்ரிக் லோகோ ஷெட் – ல் உள்ள தீயணைப்பான்களை பராமரித்தல்
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	20.01.2026 அன்று 14:00 மணி

குறிப்பு : ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விவரங்களுக்கு காண்க https://www.ireps.gov.in

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் (ரோலிங் ஸ்டாக்)
தெற்கு இரயில்வே, அரக்கோணம் – 630 001
மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும்

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

(முன்னதாக ஓயாசிஸ் ஆட்டோ பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
(ஓரிக்ஸ் ஆட்டோ இன்ஃப்ராஸ்ட்ரக்சர் சர்வீஸஸ் லிமிடெட்டின் ஒரு துணை நிறுவனம்)
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மரோல் கோ–ஆபரேட்டிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அந்தேரி– குர்லா சாலை, அந்தேரி (கி), மும்பை–400 059.
தொலைபேசி: + 91 22 2859 5089/6707 0100/ ஃபேக்ஸ்: + 91 22 2852 8549
மின்னஞ்சல்: info@orixindia.com|www.orixindia.com|CIN:U74900MH2006PLC163937

சுவாதீன அறிவிப்பு
[கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(1)]

1. இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் **ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டின்** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி **17.10.2025 தேதியிட்ட கோரிக்கை** அறிவிப்பை **கடன்தாரர்கள்** வாசுதேவன் ஸ்ரீதர் & ஷிகா ஸ்ரீதர் **ஆகியோருக்கு வழங்கி, அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையான** இந்திய ரூ.90,13,179.08/– **(ரூபாய் தொன்னூறு லட்சத்து பதின்மூன்றாயிரத்து நூற்று எழுபத்தொன்பது மற்றும் பைசா எட்டு மட்டும்) –** மற்றும் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் காலம்வரையிலான கூடுதல் வட்டி மற்றும் இதரக் கட்டணங்களுடன் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார்.

2 கடன்தாரர்கள் அந்த அறிவிப்பு வழங்கப்பட்டபோதிலும் அறிவிப்பில் குறிப்பிட்ட முழுத் தொகை மற்றும் கூடுதல் வட்டி, இதர கட்டணங்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்துகளை **29.12.2025** தேதியன்று **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்துள்ளார்.

3. கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் **ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டுக்குச் சேர வேண்டிய 15.10.2025 தேதியின்படியிலான இந்திய ரூ.90,13,179.08/– (ரூபாய் தொன்னூறு லட்சத்து பதின்மூன்றாயிரத்து நூற்று எழுபத்தொன்பது மற்றும் பைசா எட்டு மட்டும்) –** மற்றும் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் காலம்வரையிலான கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணத்துடன் கூடிய வரூலுக்கு உட்படும்.

சொத்தின் விவரம்

O.S.No.274/2B2/65, T.S.No.33, பிளாக் எண்.46, வேளச்சேரி கிராமத்தில் மனை எண்.3, சீதாபதி நகர், 4 ஆவது குறுக்குத் தெரு, அப்பாசாமி நகர் லேஅவுட், வேளச்சேரி, சென்னை–600042 இல் 1066 ச.அடி பரப்பளவு உள்ள இரண்டாவது தளத்தில் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள அடுக்குமாடி குடியிருப்பு உள்ள சொத்து. இதனுடன் ¼ பங்கான பிரிக்கப்படாத பங்கு அதாவது மொத்தமுள்ள 2800 ச.அடியில் 700 ச.அடி உள்ளது. எல்லைகள்: **வடக்கு:** S.No.280 இல் உள்ள விஜியி லேஅவுட், **கிழக்கு:** S.No.280, **தெற்கு:** 20 அடி சாலை, **மேற்கு:** மனை எண்.2

தேதி: 29.12.2025
இடம்: சென்னை

தங்கள் உண்மையுள்ள,
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

கடன் கணக்கு எண். LN0000000013801

தேர்தல் ஆதாயங்களுக்காக

ஊடுருவலுக்கு துணை போகிறார் மம்தா

அமித்ஷா பரபரப்பு குற்றச்சாட்டு

கொல்கத்தா, டிச. 31: மேற்கு வங்க மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ள நிலையில், 3 நாள் பயணமாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அங்கு சென்றுள்ளார். கொல்கத்தாவில் நேற்று அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அந்நியர்கள் ஊடுருவல் குறித்து மேற்கு வங்க மக்கள் கவலையுடன் உள்ளனர். இங்குள்ள எல்லை வழியாக நடக்கும் ஊடுருவல் என்பது மேற்கு வங்கத்தின் பிரச்னையல்ல. இதன் மூலம் தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. வரும் ஏப்ரல் மாதம் சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. அதில் ஊடுருவல்காரர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதுதான் பிரதான பிரசாரமாக இருக்கும். 2026 தேர்தலில் இங்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையுடன் பாஜ ஆட்சிக்கு வரும். அதன் பின் இந்த ஊடுருவலை முடிவுக்கு கொண்டு வருவோம். அதற்காக வலுவான தேசிய பாதுகாப்பு வேலி அமைக்கப்படும். அதை தாண்டி மனிதர்கள் மட்டுமல்ல, பறவைகள் கூட ஊடுருவ முடியாது.

அதுமட்டுமின்றி, அனைத்து ஊடுருவல்காரர்களையும் ஒருவர் பின் ஒருவராக அடையாளம் கண்டு அவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றும் பணியையும் பாஜவின் மேற்கு வங்க அரசு செய்யும். இந்தியா-வங்கதேசம் எல்லையில் வேலி அமைக்கும் பணியை ஒன்றிய அரசால் முடிக்க முடியவில்லை. ஏனென்றால் அதற்கு தேவையான நிலத்தை மம்தா பானர்ஜி அரசு தரவில்லை.

அசாம், திரிபுரா, பஞ்சாப், காஷ்மீர், ராஜஸ்தான் மற்றும் குஜராத் போன்ற நாட்டின் மேற்கு மாநிலங்களை விட மேற்கு வங்கத்தில் ஊடுருவல் பிரச்னை ஏன் மிகவும் தீவிரமாக உள்ளது என்பதற்கு முதல்வர் மம்தா பதிலளிக்க வேண்டும். இது ஏன் மேற்கு வங்கத்தில் மட்டும் நடக்கிறது? ஏனென்றால், உங்கள் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இங்கு ஊடுருவல் நடக்கிறது. இதன் விளைவாக, உங்கள் வாக்கு வங்கியை வலுப்படுத்த மாநிலத்தின் மக்கள் தொகை மெதுவாக சீராக மாற்றப்படுகிறது.

மாநிலத்தில் பாஜக ஆட்சிக்கு வந்தவுடன், கிழக்கு எல்லைகளில் இருந்து ஊடுருவலைத் தடுத்து, மேற்கு வங்கத்தின் மறுமலர்ச்சியை உறுதி செய்வோம். இவ்வாறு அமித்ஷா கூறினார்.

துச்சாதனன் வந்திருக்கிறார்

பாங்குரா மாவட்டத்தில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி, "எப்போதெல்லாம் தேர்தல் வருகிறதோ, அப்போதெல்லாம் துரியோதனனும், துச்சாதனனும் இங்கு வருவார்கள். இன்று மேற்கு வங்கத்திற்கு துச்சாதனன் வந்திருக்கிறார். ஊடுருவல் மேற்கு வங்கத்தில் மட்டும் தான் நடக்கிறதா? காஷ்மீரில், டெல்லியில் நடக்கவில்லையா? மேற்கு வங்கம் மீது மட்டும் ஏன் குற்றம்சாட்டப்படுகிறது? பஹல்காம் தாக்குதல், டெல்லி கார் குண்டு வெடிப்புக்கு இதற்கு பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் பதவியை அமித்ஷா ராஜினாமா செய்ய வேண்டும்" என்றார்.

முன்பதிவு செய்யப்படாத டிக்கெட்டுகளுக்கு

ரயில்ஒன் செயலியில் 3% தள்ளுபடி

ஜனவரி 14ம் தேதி அமல்

புதுடெல்லி, டிச. 31: மென்பொருள் அமைப்பில் தேவையான மாற்றங்களை செய்வதற்காக ரயில்வே தகவல் அமைப்பு மையத்திற்கு ரயில்வே அமைச்சகம் நேற்று அனுப்பிய கடிதத்தில், 'டிஜிட்டல் முன்பதிவை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ரயில் ஒன் செயலில் அனைத்து டிஜிட்டல் கட்டண முறைகள் மூலமாகவும் முன்பதிவு செய்யப்படாத டிக்கெட்களை வாங்கும் போது 3 சதவீதம் தள்ளுபடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தள்ளுபடி சலுகை வரும் ஜனவரி 14ம் தேதி தொடங்கி ஜூலை 14ம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். ரயில் ஒன் செயலில் ஆர்-வாலட் மூலம் முன்பதிவு செய்யப்படாத டிக்கெட்களை வாங்குவோருக்கு 3 சதவீத கேஷ்பேக் வழங்கப்படுகிறது. இந்த கேஷ்பேக் தள்ளுபடி நீடிக்கும்' என கூறப்பட்டுள்ளது.

இந்தச் சலுகை வேறு எந்த ஆன்லைன் முன்பதிவு செய்யப்படாத டிக்கெட் வாங்கும் தளத்திலும் கிடைக்காது என ரயில்வே அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. டிக்கெட் முன்பதிவு உள்ளிட்ட ரயில்வே தொடர்பான அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கும் வகையில் ரயில் ஒன் செயலி உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
மின்னணு - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோருதல்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிகளுக்காக சென்னைக் குடிநீர்வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தமிழ்நாடு ஒளிமுறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

வ. எண்.	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன் வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்தம் சமர்ப்பிப்பு இறுதி தேதி	மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி
1.	பகுதி IV-இல், பணிமனை 40 உள்ள எம்மார் அடுக்குமாடி (EMAAR) குடியிருப்புகளிலிருந்து 150 மிமீ விட்டமுள்ள பிரத்யேக வார்பிருப்பு கழிவுநீர் குழாயினை தண்டையார்பேட்டை 'F' கழிவு நீரேற்றுக்கும் நிலையம் வரை வழங்கி மற்றும் பதிக்கும் பணிகள். **ஒப்/கநீர்/வைப்பு/3709/2025-26**	ரூ. 40,000.00	வகுப்பு II,ஆ மற்றும் அதற்கு மேல்	20.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	21.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு
2.	பகுதி XV-இல், பணிமனை 195 மற்றும் 196 உள்ள எழில் நகர் மற்றும் கனாமி (ETRP) குடியிருப்புகளின் 10 லட்சம் லிட்டர் மற்றும் 5 லட்சம் லிட்டர் கொண்ட கீழ்நிலைத் தொட்டிகளின் தற்போதைய மின் இயந்திரையில் அமைப்புகளை மேம்படுத்தும் பணிகள். **ஒப்/குநீர்/வைப்பு/3710/2025-26**	ரூ. 46,400.00	வகுப்பு II,ஆ மற்றும் IV,அ & அதற்கு மேல்	20.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	21.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு
3.	ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனையாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்படவேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன்வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்கேன் செய்யப்பட்ட நகலை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும்.				
4.	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ - ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் **02.01.2026** முதல் இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.				

செ.ம.தொ.இ./6884/ஒப்பந்தப்புள்ளி/2025

மேற்பார்வை பொறியாளர் (ஒப்பந்தம் மற்றும் கணக்காணிப்பு)

ஓய்வு பெற்ற இராணுவத்தினரை பணியமர்த்தல்

தேசிய மாணவர்படை அலுவலகங்களில் பணியாற்ற சென்னை, கோயம்புத்தூர், மதுரை, புதுச்சேரி, திருச்சி & அந்தமான் நிக்கோபார் பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ **JCO-க்கள் & NCO-க்களிடமிருந்து** ஒப்பந்த அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்களாக பணியமர்த்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன (JCO-19 & NCO-46)

மேலும் விவரங்களுக்கு:

https://nis.bisag-n.gov.in/nis/downloads-public

மின்னஞ்சல் ஐடியில் பதிவேற்றம் செய்ய வேண்டிய விண்ணப்பங்கள்:

ncctn.pandc@gmail.com

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: **16 ஜனவரி 2026**

தயவு செய்து கவணிக்கவும்: முன்னாள் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் சேவை இடைவெளி இருக்கக்கூடாது. முன்